பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 22 | வியாழக்கிழமை | 06.03.2025 | அதிர்வு 214

## யாழில் வீட்டிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மருதடி வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று புதன்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

41 வயதுடைய நபரே சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

07



### மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்:

# இந்தியாவுடன் முரண்பட நாங்கள் இடமளியோம்!

### சீனா மூக்கை நுழைப்பதற்கும் அனுமதிக்கமாட்டோம் என சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. திட்டவட்டம்

“எமது கடல் எல்லைக்குள் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்களை நிறுத்துவதற்கு அநுர அரசு, இந்திய மத்திய அரசு மற்றும் தமிழ் நாட்டு அரசுடன் கலந்துரையாட வேண்டும். இந்தப் பிரச்சினையைக் காரணமாகக் கொண்டு இந்தியாவுடன் முரண்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. இதில் சீனாவின் தலையீடும் இருந்து வருகின்றது.”

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

07




# வடக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமெனில் சட்டவிரோத மீன்பிடியை இந்தியா தடுக்க வேண்டும்!

### மோடியின் இலங்கை விஜயத்தின்போதும் இந்த விடயத்தை வலியுறுத்துவோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



“வடக்கு மாகாண மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் இந்தியாவுக்கு இருந்தால் இந்திய மீனவர்களின்சட்டவிரோதசெயற்பாடுகளைமுடிவுக்கு கொண்டு வர வேண்டும். இந்தியச் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை இந்தியா வழங்க வேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது இந்த விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவோம்.”

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று

06




தேசியப் பொலிஸ் ஆணையத்துக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவிற்கும் இடையில் நிர்வாக ரீதியாக ஏற்பட்டிருக்கும் முட்டுப்பாடு சாத்தியமான அரசமைப்பு நெருக்கடியாக விரிவடையும் ஏது நிலைகள் தென்படுகின்றன. இது குறித்து தேசியப் பொலிஸ் ஆணையமே பதில் பொலிஸ்மா அதிபருக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

பொலிஸ் இடமாற்றங்கள் தொடர்பாக தேசியப் பொலிஸ் ஆணையத்தின் வழிகாட்டலை ஏற்க மறுத்து, அவ்விடயம் தொடர்பில் தாம் சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்கின்றார் எனப் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தமையை தன் கட்டமைப்புக்குச் சவால் விடுக்கும் நடவடிக்கையாக தேசியப் பொலிஸ் ஆணையம் கருதியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

பொலிஸ் அதிகாரிகளின் பதவி நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பாக பதில் பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைகள் சிலவற்றை தேசியப் பொலிஸ் ஆணையம் அங்கீகரிக்காமல்

06

# அதிகரித்துள்ள போதைப்பொருள் ஊடுருவல்களினால் அழிவடையும் எதிர்கால சந்ததியைக் காப்பாற்றுங்கள்!

## சட்டம் - ஒழுங்கைச் சீர்படுத்த ரவிகரன் எம்.பி. கோரிக்கை




(விஜயரத்தினம் சரவணன்)

வடபகுதியில் அதிகரிந்துள்ள போதைப்பொருள் ஊடுருவல்களாலும், போதைப்பொருள் பாவனைகளாலும் ஒருதொகுதி எதிர்கால சந்ததியினர் அழிவடைத் தொடங்கியுள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சட்டம் ஒழுங்கைச் சீர்ப்படுத்தி எதிர்கால தலைமுறையினரையும், பொதுமக்களையும் பாதுகாக்க விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனைகளைஜ் கட்டுப்படுத்துவது தொடர்பில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் நேற்று நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார். அந்தப் பிரேரணைதொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

போதையினால் நாடு மட்டுமல்ல எங்களுடைய மாவட்டங்களும் தள்ளாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே நான் பாதுகாப்பு அமைச்சின் குழுநிலை விவாதத்தில் கூட போதைப்பொருள்களின் ஊடுருவல்கள் தொடர்பிலும், அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் பேசியிருந்தேன்.

இருப்பினும் சக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தியினால் முன்மொழியப்பட்ட இந்த ஒத்திவைப்புவேளைப் பிரேரணைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிச்சயமாக இது மிகவும் பொருத்தமான ஒத்திவைப்புவேளைப் பிரேரணையாகும்.

நாட்டின் அதியுயர்பீடமாகக் காணப்படும் நாடாளுமன்றிலே, தற்போது நாட்டில் போதைப்பொருள்களால் சீரழிந்துகொண்டிருக்கும் இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த போதைப்பொருள் ஊடுருவல்கள் பாடசாலைகளில் கூட இடம் பெற்று வருவதை தற்போது நாம் அவதானித்து வருகின்றோம்.

போதைப்பொருள் பாவனையால் எமது சந்ததிகள் – ஒருதொகுதி எதிர்காலத் தலைமுறையினர் – அழிந்து வருகின்றனர்.

நான் கிராமந்தோறும் மக்கள் சந்திப்பிற்காகச் செல்கின்றபோது, போதைப்பொருள் பாவனையால் தமது கிராமத்தில் பலர் இறந்துவிட்டனர் எனவும், பலர் இறக்கும் நிலையில் பாதிக்கப்பட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர் எனவும் சில கிராமங்களில் மக்களால் என்னிடம் முறையிடப்பட்டது.

நாட்டில் இத்தகைய நிலை ஏற்படுவதற்கு காரணம் யார்? எமது நாட்டிலிருக்கும் பாதுகாப்புப் படையினர் சீராகச் செயற்பட்டால் இவ்வாறு போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் இறப்புக்களோ, பாதிப்புக்களோ இருக்காது.

இந்தப் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துகின்ற விடயத்தில் பொலிஸாருக்கு முக்கிய பொறுப்பு இருக்கின்றது. சட்டம் ஒழுங்கு முறையாகச் செயற்படுத்துங்கள்.

இந்த விடயத்தில் கூடிய கரிசனை செலுத்தி போதைப் பொருள்களிடமிருந்து எமது மக்களைக் காப்பாற்றுங்கள். அதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுங்கள் – என்றார்.

# வவுனியாவில் விரைவில் ஒசுசல அரச மருந்தகம் திறக்கப்படும் என அமைச்சர் உறுதி தெரிவிப்பு

## சத்தியலிங்கம் எம்.பி. தகவல்

(கி.வசந்தன்)

வவுனியாவில் ஒசுசல அரசாங்க மருந்தகம் விரைவில் திறக்கப்படும் என சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தன்னிடம் இது தொடர்பில் உறுதியளித்தார் என அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:–

கடந்த மாதம்நாடாளுமன்றஅமர்வின் போது வவுனியா மாவட்டத்தில் அரசாங்க மருந்தகம் ஒன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இதனால் குறைந்த விலையில் மக்கள் மருந்துகளை வாங்க முடியும் என்றும் கோரிக்கை வைத்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து நாடெங்கிலும் அரசாங்க மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்களில் ஒசுசல மருந்தகங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பார் என சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சு மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயத்தை மீண்டும்



அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். இதன்போது, வவுனியாவில் விரைவில் அரசாங்க மருந்தகம் திறக்கப் படவுள்ளதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். – என அவர் தெரிவித்தார்.



# புறக்கோட்டையில் நேற்று தீப்பரவல்

புறக்கோட்டை – பங்கசால வீதியில் உள்ள ஒரு விற்பனை நிலையத்தில் நேற்று இரவு தீ பரவல் ஏற்பட்டது.

இந்த தீயை கட்டுப்படுத்த16 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 60 தீயணைப்பு வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர் என தீயணைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# செல்வம் அடைக்கலநாதன் சீ.வீ.கே. சிவஞானத்துக்கு கடிதம்



எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்துக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் எழுதியுள்ளார். அவர் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

"எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல் சம்பந்தமான தங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் இணைந்து செயலாற்றுவது சம்பந்தமாக தங்களுடைய விருப்பத்தை அதில் வெளிப்படுத்தியிருந்தீர்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒன்றான எமது கட்சி பல்வேறு விதமான சவால்கள் விமர்சனங்கள் இடையூறுகள் எல்லாவற்றையும் தாண்டி எமது மக்களின் இன நலன் சார்ந்து ஒற்றுமையாகவும் பலமாகவும் அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்பதில் பல விட்டுக் கொடுப்புக்களோடும் சகிப்புத்தன்மையோடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தொடர்ந்தும் பயணித்து வருகிறது.

2023இல் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக தங்களுடைய மத்திய குழு, வவுனியாவிலும் பின்னர் இறுதியாக மட்டக்களப்பிலும் எடுத்த ஏகோபித்த முடிவிற்கமைய தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

எமது கட்சியும், புளொட் அமைப்பும் அந்த நேரத்தில், தேர்தல் நலன்கள், வெற்றி தோல்விகள், அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ளல் என்பவற்றைத் தாண்டி இன நலன் சார்ந்து ஒருமித்து பயணிக்க வேண்டிய கட்டாயத்தை தங்கள் கட்சித் தலைமையிடம் வலியுறுத்திய போதும் தங்களது கட்சி மத்தியகுழுவின் முடிவே இறுதியானது, என உறுதியாக தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை அறிவித்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நலிவடையாமல் தொடர்ந்தும் பாதுகாப்பதன் நோக்கத்தோடு தமிழ் தேசிய பரப்பில் இருந்த கட்சிகளோடு ஒன்றிணைந்து கூட்டணியாக நாம் பயணித்துக் கொண்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு முகம் கொடுத்திருக்கும் நமது இனம் தேர்தல் நலன்களை மாத்திரம் முக்கியப் படுத்தும் இந்தப் பிரிவின் மூலம் எதிர்காலத்தில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை தீர்க்கமாக நாம் எதிர்வு கூறி இருந்தோம். இன்று அந்த நிலைக்கு எங்களுடைய இனம் தள்ளப்பட்டிருப்பதை நன்கு உணர்ந்து, இணைந்து செயல்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி தாங்கள் முன் வைத்துள்ள அழைப்பை நாங்கள் வரவேற்கிறோம். இன நலத்திற்காக விட்டுக்கொடுப்போடு பயணிப்பதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்தே அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பது எமது இனத்துக்கு நலன் பயக்கும் என்ற கொள்கையோடு ரெலோ, ஈபி ஆர் எல் எப், ஈரோஸ் ஆகியோருடன் விடுதலைப் புலிகளையும் இணைத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்) என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்கள் நாங்கள்.

மேலும் கடந்த 2024 இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் நாம் மக்கள் நலன் சார்ந்து ஒன்றிணைந்து விட்டுக் கொடுப்போடு வெற்றி தோல்விகளை கருத்தில் கொள்ளாது பயணித்தமையையும், அம்பாறை மாவட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாடு தங்கள் கட்சியின் நிலைப்பாட்டால் தொடரமுடியாமல் போன துரதிர்ஷ்டமான சூழலையும் கவலையுடன் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தங்கள் அழைப்பை ஏற்று எமது கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒன்றிணைந்து பயணிப்பது சம்பந்தமான தீர்க்கமான ஒரு முடிவை நாம் எட்ட நாம் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி அமைப்பாளராக மதன் நியமனம்



சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்துக்கான அமைப்பாளராக முன்னாள் சிரேஷ்ட ஊடகவியலாளரும், கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியக முன்னாள் தவிசாளருமான ப.மதனவாசன் (மதன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தமது நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து உத்தியோகபூர்வமாகப் பெற்றுக் கொண்டார்.



# போக்குவரத்து பொலிஸாருக்கான வெகுமதி தொகை அதிகரிப்பு

போக்குவரத்து கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வெகுமதித் தொகை 25 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வருகின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த முதலாம் திகதி பதில் பொலிஸ் மாஅதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து உத்தியோகத்தர்களின் கடமைகளின் வினைத்திறன் மற்றும் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மித்தெனிய முக்கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி கைது



மித்தெனிய முக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரியென சந்தேகிக்கப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மித்தெனிய பகுதியில் தலைமறைவாகியிருந்த 42 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டின் பின்னர் சந்தேகநபர் தப்பிச்சென்ற மோட்டார் சைக்கிளும் மித்தெனிய பகுதியிலுள்ள கற்குழியொன்றுக்குள் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுழியோடியின் ஒத்துழைப்புடன் மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி மித்தெனிய பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மீகஸ்ஆரே கஜ்ஜா என அழைக்கப்படும் அருண விதானகமகே மற்றும் அவரின் 6 வயது மகள் மற்றும் 9 வயது மகன் ஆகியோர் உயிரிழந்தனர்.

# மேர்வின் சில்வா கைது



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் நேற்று மேர்வின் சில்வா கைது செய்யப்பட்டார்.

கிரிபத்கொட பகுதியில் வியாபார நிலையங்களை வழங்கிய சம்பவம் ஒன்று தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிராகரித்தமையை அடுத்து, பொலிஸ் துறையின் உள் விவகாரங்கள், நிர்வா கங்களில் தேசியப் பொலிஸ் ஆணையம் முறையற்றுத் தலையிடுவதாக பதில் பொலிஸ்மா அதிபர் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளை தேசியப் பொலிஸ் ஆணையம் நிராக ரித்துள்ளது. இது தொடர்பாக தேசியப் பொலிஸ் ஆணையம் தெரிவிக்கும் கருத் துகள் கவனிக்கப்பட வேண்டியவை.

இலங்கைப் பொலிஸில் 80,000 ஆள ணியினர் உள்ளனர். ஆனால், தேர்ந்தெ டுக்கப்பட்ட அதிகாரிகள் குழுவிற்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், இட மாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக் கைகளை மட்டுமே ஆணையம் கையாள் கிறது என்று ஆணையம் விளக்கமளித் தது.

ஆக, தலைமையக இன்ஸ்பெக்டர்கள், பொலிஸ் பொறுப்பு அதிகாரிகள் என 607 பேர் மற்றும் அரசினால் அறிவிக்கப்பட்ட அதிகாரிகள் (அதிரடிப் படை பணிக்குழு உட்பட) 813 பேர் என மொத்தம் 1,420 அதிகாரிகள் தொடர்பில் மட்டுமே தேசியப் பொலிஸ் ஆணையத்தின் கண்காணிப்பு வருகின்றது என்பதையும் ஆணையம் சுட்டிக் காட்டியுள்ளது.

மற்றைய அனைத்து அதிகாரிக ளின் நியமனம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன அரச மைப்பின்படி, பொலிஸ்மா அதிபருக்கு முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதை அது மேலும் தெளிவுபடுத்தியது.

இந்த நியமிக்கப்பட்ட 1,420 அதிகா ரிகள் கூட , பொலிஸ்மா அதிபருடன் சேர்ந்து, தேசிய பொலிஸ் ஆணையத் தின் தலையீடு இல்லாமல், தற்போதுள்ள விதிகள், ஒழுங்குமுறைகள், சுற்றறிக் கைகள் மற்றும் நடைமுறைகளின் எல் லைக்குள் செயல்பட சுதந்திரமாக உள்ள னர் என்பதையும் ஆணையம் சுட்டிக் காட்டியுள்ளது.

பொலிஸ் துறையின் உள் விவகா ரங்களில் ஆணையம் தலையிடுவ தில்லை அல்லது பொலிஸ்மா அதிபரின் பங்கைத் தடுப்பதில்லை என்று கூறி, பொலிஸ்மா அதிபரின் குற்றச்சாட்டுகளை தேசிய தேசியப் பொலிஸ் ஆணையம் நிராகரித்தது.

அரசமைப்பு மற்றும் பிற தொடர்பு டைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் படியேதான் எப்போதும் தனது கடமைக ளைத் தான் செய்கிறது என்று ஆணையம் வலியுறுத்தியது.

தற்போதைய தேசிய பொலிஸ் ஆணை யம் இரண்டு முந்தைய பொலிஸ்மா அதி பர்களுடன் இணைந்து பணியாற்றியுள் ளதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபராக பிரி யந்த வீரசூரிய நியமிக்கப்பட்ட பிறகு, 27.09.2024 முதல் 31.01.2025 வரை யான காலத்தில் 10 சிரேஷ்ட டி.ஐ.ஜிக் கள், 14 டி.ஐ.ஜிக்கள், 60 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 13 பொலிஸ் அத்தி யட்சகர்கள், 58 உதவிப் பொலிஸ் அத் தியட்சகர்கள் மற்றும் 239 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு மூத்த அதிகாரிகளுக்கு அவர் இடமாற்றம் கோரினார் எனத் தேசிய பொலிஸ் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தக் கோரிக்கைகள் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டு, 8 சிரேஷ்ட டி.ஐ.ஜிக்கள், 13 டி.ஐ.ஜிக்கள், 58 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 12 பொலிஸ் அத்தியட்சகர்கள், 56 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 183 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோரின் இடமாற்றங்களுக்கு ஒப்பு தல் வழங்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணையம் விளக்கியுள்ளது.

இருப்பினும், தேவையான துணைத் தகவல்கள் வழங்கப்படாதமையால் கோரப் பட்ட பல இடமாற்றங்கள் அங்கீகரிக் கப்படவில்லை என்றும் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரின் கோரிக் கைகளுக்கு இணங்க பல இடமாற்றங் களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட போதி லும், அவை இன்னும் செயல்படுத்தப் படவில்லை என்றும் தேசிய பொலிஸ் ஆணையம் சுட்டிக்காட்டியது. இந்தத் தாமதம் குறித்து பதில் பொலிஸ்மா அதி பரிடம் விசாரித்து, விளக்கம் கோர ஆணை யம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், பொலிஸ் பொறுப்பதிகாரிக ளின் நியமனம் மற்றும் இடமாற்றம் தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோ சனை கேட்பதாக பதில் பொலிஸ்மா அதி பர் கூறிய போதிலும், தேசிய பொலிஸ் ஆணையத்திற்கு அது குறித்து எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் கிடைக்க வில்லை என்பதை தேசிய பொலிஸ் ஆணையம் எடுத்துக்காட்டியது. பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் நியமனம், இட மாற்றம் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு ஆகியவை தேசிய பொலிஸ் ஆணை யத்தின் அதிகாரத்தின் கீழ் வருவதால், தேசிய பொலிஸ் ஆணையத்திற்குத் தெரிவிக்காமல் பதில் பொலிஸ்மா அதி பர் இந்த விடயத்தில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்பது பொருத்தமான தல்ல என்றும் ஆணையம் கூறுகின்றது.

தேசிய பொலிஸ் ஆணையத்தால் எடுக்கப்பட்ட சில முடிவுகளை செயல்படுத் தாமையால் ஏற்படக்கூடிய அரசமைப்பு நெருக்கடி குறித்து 21.02.2024 அன்று பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப் பட்டதாக ஆணையம் தெரிவித்துள்ளது. நிலைமை குறித்து அரசமைப்பு கவுன்சி லுக்கும் அறிவித்துள்ளதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணையத்துடன் நெற்றி முட்ட மோதுவதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தயாராகி வருகின்றமை அரசமைப்பு நெருக்கடிகளை மாத்திரமல்லாமல் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு மற்றும் அரச நிர்வாகத்தையும் கூடச் சிக்கலுக்குள் மாட் டச் செய்யலாம் என்று சம்பந்தப்பட்ட வட் டாரங்கள் அதிர்ச்சி தெரிவிக்கின்றன.

அவ்வப்போது அரசமைப்பு கவுன்சி லின் அங்கீகாரத்தின் கீழ் நீடிக்கப்படு கின்ற பதவி நிலையில்தான் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இப்போதும் உள்ளார்.

ஆயினும் அரசமைப்பு கவுன்சி லில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பிரதி நிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனின் நிபந்தனையற்ற ஆதரவு அரசு தரப்புக்கு இருக்கும் வரை பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வின் பதவி நீடிப்பு தொடர்ந்து தடை யின்றி உறுதிப்படுத்தப்படும் நிலை மையே உள்ளது.

ஆனால் இந்த நிலைப்பாட்டுக்காக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனும் தமிழரசுக் கட்சியும் இலங்கை அரசியலில் எதிர்க் கட்சிகள் தரப்பினால் மோசமாக விமர் சிக்கப்படும் நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை...!

## வடக்கு மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத் தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாது காப்பு மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரி யல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மீதான குழு நிலை விவாதத் தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, "நாட்டில் வடக்கு மாகாணத்தில்தான் அதிகளவான மீனவர்கள் உள்ளார்கள். அத்துடன் மீன்பிடி மற்றும் அதனுடனான தொழில்களில் அதிகளவானோர் ஈடுப டுகின்றார்கள். வடக்கு பகுதியில் வாழும் மீனவர்கள் கஷ்டமான வாழ்க்கை முறை மையில்தான் உள்ளார்கள். கடற்றொ ழிலை மேம்படுத்துவதைப் போன்று அந்தத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தை யும் மேம்படுத்த வேண்டும். அதற்கான பொறுப்பு கடற்றொழில் வளங்கள் அமைச் சுக்கு உண்டு.

வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் அதனு டான இணை கைத்தொழில்களை மேம் படுத்துவதற்கும் விசேட கவனம் செலுத் தப்பட்டுள்ளன. வடக்கில் அதிகளவான கடற்றொழிலுடன் தொடர்புடைய வளங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் தெற்கில் உள்ள மீனவர்களை காட்டிலும் வடக்கில் உள்ள மீனவர்கள் வாழ்வாதார ரீதியில் கஷ்டப்படுகின்றார்கள்.

இந்திய மத்திய அரசிடமும், தமிழ் நாடு அரசிடமும் விசேட கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். யுத்தம் மற்றும் பல்வேறு காரணிகளால் இலங்கை யர்கள் படகு ஊடாக ஆஸ்திரேலியாவுக் குச் செல்லும்போது ஆஸ்திரேலிய அரசு, "படகு ஊடாக ஆஸ்திரேலியாவுக்கு வர வேண்டாம்" என்று பல விளம்பரங்களை அழுத்தமாக வெளியிட்டது. அத்துடன் சட்ட ரீதியிலான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

மீன்பிடிக் கைத்தொழிலைத் தவிர்த்து வடக்கு மக்களுக்கு வேறு எந்த கைத் தொழில்களும் கிடையாது. வடக்கு மக் களின் ஒரே ஜீவனோபாயத்தை இல்லா தொழிக்க இடமளிக்க வேண்டாம் என்று இந்திய அரசிடம் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். இந்தியாவில் உள்ள சட் டங்களை செயற்படுத்துங்கள். இவற்றைச் செயற்படுத்தாமல் வடக்கு மக்களின் நலன் புரி பற்றி பேச முடியாது." – என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வர் மனோ கணேசன் எம்.பி.,

"உங்களின் கருத்து மிகவும் முக்கிய மானது. இந்தியப் பிரதமர் எதிர்வரும் மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். ஆகவே, தயவு செய்து பேச்சு ஒழுங் கில் இந்த விடயத்தையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

வடக்கு மக்களுக்கு இது பாரியதொரு பிரச்சினை. எமது சொத்துக்களை கொள் ளையடித்துச் செல்கின்றார்கள்.

யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகி விட்டன. இந்தியா உதவி செய்தது என் பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுங்கள் நாங்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்." – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய 07






# டேசி ஃபொரஸ்ட் விக்கிரமசிங்க பிணையில் விடுதலையானார்

குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட டேஸி பொரஸ்ட் விக்கிரமசிங்க பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நிதி மோசடி வழக்கு தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்க சென்ற போது அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் கடுவெல நீதவான் நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்

இந்த நிலையிலேயே அவருக்கு பிணை வழங்கப் பட்டுள்ளது.

இந்த விசாரணை தொடர்பில் இதற்கு முன்னர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

## வடக்கு மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

.அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

“இது பாரதூரமான பிரச்சினை. அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைளை இந்திய ரசால் நிறுத்த முடியும். இந்திய அரசு இலங்கைக்குப் பல உதவிகளைச் செய் கின்றது. வடக்கு மக்களின் இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வு காணாமல் வழங்கும் உதவிகள் உண்மையானதாக அமை யாது.

இந்திய மீனவர்களின் எல்லை மீறல் செயற்பாடு நாளாந்த பிரச்சினையாகவே காணப்படுகின்றது. இந்திய அரசு இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். மக்கள் சுதந்திரமாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவ தற்கு இடமளிக்க வேண்டும். இந்திய அரசு இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்து கின்றேன்.” – என்றார்.

## இந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண் டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் கிரா மிய அபிவிருத்தி, சமூகப் பாகாப்பு மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற் றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சுகளின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்,

“போர்க் காலத்திலும் அதற்குப் பின்ன ரான காலத்திலும் எமது மீனவர்களின் வாழ்க்கை மிகவும் பின்தங்கிய நிலை யிலேயே இருக்கின்றது.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகு பிரச்சினை அங்கு பூதாகரமாக வெடித்திருக்கின்றது. மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படு கின்ற பாதிப்புக்களுக்கு காப்புறுதித் திட் டம் ஒன்று கூட இதுவரை இல்லாமல் இருக் கின்றது. அதனால் மீனவர்கள் தங்களின் உடமைகளை இழக்கும்போது அதற்கான இழப்பீட்டை வழங்குவதற்கான நடவடிக் கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாமல் இந்தியப் படகுகள் கடல் எல்லைக்குள் வருவதை நிறுத்த நடவ டிக்கை எடுத்தால், அவர்களின் பிரச்சி னைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை முன் வைப்பதற்குத் தயாராக இருப்பதாக எமது மீனவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ப்பாக நாங்கள் முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித் துக் கலந்துரையாடியபோது, ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தி னால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நாங்கள் ஆலோசனையாகத் தெரிவித்திருந்தோம்.

அதனால் அரசு இந்தப் பிரச்சினை குறித்து கலந்துரையாட தமிழ் நாட்டு மற்றும் இந்திய மத்திய அரசுடன் கலந்து ரையாட நடவடிக்கை எடுங்கள். அதற்கு நாங்கள் எமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம். அப்போது இந் திய மீனவர்கள் மீன்பிடிக்க வருவதற்கான வழிமுறையை நாங்கள் தெரிவிப்போம்.

அதனால் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் முல்லைத்தீவு அல்லது மன் னாரில் மீன்பிடி வளாகத்தில் மீன்பிடித் துறைமுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதன் மூலம் மீனவர் பிள்ளைகளுக்குக் கடல்சார் கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள் கின்றேன்.

இதன் மூலம் மீனவர் சமூகத்தின் கல்வி நிலையில் முன்னேற்றத்தை மேற்கொள்ள முடியும். அதேநேரம் கடற் றொழில் நடவடிக்கையை முன்னேற்ற அமைச்சர் எடுக்கும் நடவடிக்கையை செயற்படுத்த வேண்டுமானால் அங்குள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியமா கும். ஊழல் அற்ற அதிகாரிகள் இருக்க வேண்டும். அதனால் அங்குள்ள நீண் கால அதிகாரிகளை இடமாற்ற நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் இந்திய இழுவைப் படகை வைத்துக்கொண்டு இந்தியாவுடன் நாங் கள் முரண்பட வேண்டும் என்ற சிந் தனை ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிப் பதில்லை. இந்த விடயத்தில் சீனாவின் தலையீடும் இருந்து வருகின்றது. சீனா இன்று வடக்கிலே எமது மீனவர்களுடன் எந்த அர்த்தத்தில் நாடுகின்றனர் எனக் கேட்கின்றேன்.

நிலங்களைக் கைப்பற்றுவதும் வளங்களை ஆக்கிரமிப்பதுமே சீனாவின் சிந்தனை. அதனூடாக வடக்கிலே எந்த நடவடிக்கையையும் நாங்கள் அனும திப்பதில்லை. வடக்கில் இந்தியாவைத் தவிர வேறு ஒரு நாடு மூக்கை நுழை விப்பதற்கு நாங்கள் அனுமதிப்பதில்லை.” – என்றார்.

## யாழில் வீட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி நபர் குடும்பப் பிரச்சினை கார ணமாக தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக் காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சோரம் போகும் தலைமை

சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியவற்றைக் கையாளும் நிறுவனங்களின் பின்புலத்தில் இடம்பெறும் கொலைகள் உட்பட்ட பல அடுக்கு வன்முறைகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாமல் விசேட விலக்குரிமை அளிக்கும் போக்கு புதிய அரசின் கீழும் தொடரும் ஆபத்து இருப்பதாக சர்வ ஜன நீதி கட்டமைப்பு எச்சரித்துருக்கின்றது.

அண்மைக் காலத்தில் பொலிஸ் காவலிலும் சிறைத் துறையினரின் காவலிலும் இருந்த சந்தேக நபர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் உட்படப் பல தொடர் கொலைகள் தொடர்பில் - குறிப்பாக 'என்கவுண்டர்கள்' போன்றவை தொடர்பில் - இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

நாட்டின் சட்ட மற்றும் முக்கிய பிரமுகர்கள் இதை பொதுமக்களுக்கான அறிக்கையாக வெளியிட்டு இருந்தாலும் அது புதிய அரசுக்கு ஒரு செய்தி சொல்லும் அறிவிப்பு தான்.

இந்த அறிவிப்பின் ஊடே அப்பட்டமாக அல்லாமல் - வெளிப்படையாக அல்லாமல் - சில விடயங்களை அந்தப் பிரமுகர்கள் நாசூக்காக வெளிப்படுத்த முன் வந்திருக்கிறார்கள். அவற்றை பொதுமக்கள் புரிந்து கொண்டார்களா என்பதுதான் கேள்வி.

முன்னைய அரசுகளின் ஆட்சிக் காலத்தில் சட்டம் - ஒழுங்கு, பாதுகாப்புத் துறைகளில் இருப்பவர்கள் அவற்றைப் பாதுகாக்கின்ற பெயரில் புரிந்த பல அடுக்கு வன்முறைகள், படுகொலைகள் தொடர்பில் தண்டனையிலிருந்து தப்பிப் பிழைக்கும் சிறப்பு விலக்குரிமைகளைப் பெற்றிருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக சித்திரித்த கொழும்பு ஆட்சிப் பீடங்கள், அந்த அமைப்பை அழித்து ஒழிப்பதற்காக அரச பயங்கரவாதத்திற்கு அங்கீகாரம் அளித்த போது, இந்தத் தண்டனை விலக்களிப்பு சிறப்புரிமையும் அவர்களுக்குச் சேர்த்தே வழங்கப்பட்டு வந்தது.

பாதுகாப்புத் தரப்பினருக்கு இப்படி விசேட விலக்குரிமையின் கீழ் குற்றங்களைக் கட்டுமட்டில்லாமல் தொடர்வதற்கு இடம் அளித்தமையால் விசனமடைந்திருந்த மக்களே கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ஒரு பெரிய மாற்றத்தைக் கோரி அநுர குமார திஸநாயக்காவுக்கும் அவரது தேசிய மக்கள் சக்திக்கும் வாக்களித்தார்கள் என்பதை சர்வஜன நீதி அமைப்பு பிரமுகர்கள் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆக, இந்த அரசுக்கு அளிக்கப்பட்ட இத்தனை வாக்குகளுக்கு - மக்கள் வாரி வழங்கிய செல்வாக்கு - முக்கிய காரணங்களில் ஒன்று படைத்தரப்பினரும் பாதுகாப்பு தரப்பினரும் இழைக்கும் குற்றங்களுக்கு தண்டனை விலக்களிக்கும் போக்கும் அடியோடு நீக்கப்பட வேண்டும் என்பதாகும். அதை அந்த சர்வஜன நீதி அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டுகின்றது.

ஆனால் அந்தப் போக்கு தொடர்வதையே சமீபத்திய படுகொலைகள், வன்முறைச் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன என்பதை அந்த அமைப்பு வெளிப்படுத்தி உள்ளது.

அது மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்ற ஒரு விடயம் கவனிக்கத்தக்கது.

இத்தகைய குற்றங்களை புரிந்து விட்டு, தண்டனை விலக்களிப்பு சிறப்புரிமையைப் பெறுவதற்காகவே பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்ற கொடூரச் சட்டங்களை நீடிப்பதற்கு பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் முனைப்பாக இருக்கிறார்கள், அந்தச் சதியில் விழுந்து விடாதீர்கள் என்பதை அந்த அமைப்பு தற்போதைய ஆளும் தரப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இந்த அறிக்கை ஊடாக நாசூக்காகச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆனால், இந்த ஆட்சி பீடம் அத்தகைய தண்டனை விலக்களிப்பு சிறப்புரிமையைத் தொடர்ந்து அனுபவித்து, சட்டத்தைத் தம் கையில் எடுத்து, வன்முறைகளை கட்டவிழ்த்து விடக் காத்திருக்கும் சட்ட - ஒழுங்கு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்களின் சதியில் ஏற்கனவே விழுந்து விட்டது என்பதுதான் அப்பட்டமான உண்மை. துன்பியல் நிலையும் கூட.

எதிர்க் கட்சியில் இருக்கும் வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அதற்கு மாற்றீடு இல்லாமல் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று குத்தி முறிந்த இதே தேசிய மக்கள் சக்தியினர், இப்போது அந்த விடயத்தில் அந்தர் பல்டி குத்துக் கரணம் அடித்ததன் பின்னால் இந்த சட்ட - ஒழுங்கு, பாதுகாப்புத் தரப்பினர் தமக்குக் கிடைக்கும் தண்டனை விலக்களிப்பு உரித்தைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற அழுத்தத்துக்கு அவர்கள் (புதிய ஆட்சியாளர்கள்) அடிபணிந்து சோரம் போய் விட்டார்கள் என்பதுதான் உள்ளது. அதுதான் உண்மை.

அதை தன்னுடைய வரிகளுக்கிடையில் கோடி காட்டி இருக்கின்றது சர்வ ஜன நீதி அமைப்பு.

இப்போது அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையை வாசித்து பாருங்கள். உண்மை புரியும்.



# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நால்வர் பொலிஸாரால் கைது

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நால்வர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத் தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் நால்வரை கைது செய்துள்ளதுடன், கசிப்பு

உற்பத்தி நிலையங்களில் களமிறங்கி 22 கொள்கலன்களும், கோடாக்கு பயன்படுத்தும் சுருள், கோடா என்பனவற்றையும் கைப்பற்றியிருந்தனர்.

மன்னாகண்டல் , 10 ஆம் வட்டாரம்,

தேவிபுரம், சுதந்திரபுரம் , உடையார்கட்டு , வெள்ளப்பள்ளம் போன்ற பல்வேறு பகுதிகளில் களமிறங்கி தேடுதல் பணியின் மூலமே இவ்வாறு 4 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்திய போது கசிப்பு உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஏனைய மூவரும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

















# வவுனியா மாவட்ட செயலகத்தில் தொழில் சந்தை

(கி.வசந்தன்)

மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடாத்தும் மாபெரும் தொழில் சந்தை நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி சபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இத்தொழில் சந்தையில் முப்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் வருகை தந்திருந்தன. நூறுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெறும் நோக்குடன் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















# வவுனியாவில் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த போதை மாத்திரைகளுடன் இருவர் கைது!

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து போதை மாத்திரை வியாபாரம் செய்யப்படுவதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனியின் அறிவுறுத்தலின் கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயதிலக தலைமையில் சப் இன்ஸ்பெக்டர்




ராஜகுரு, பொலிஸ் சார்ஜண்டுகளான திசாநாயக்க, அசங்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்நக்க, விதுசன், பொலிஸ் சாரதி திசாநாயக்க உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் சந்தேகத்திற்கிடமான வீட்டைச் சுற்றி வளைத்து சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 180 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. அவற்றை உடமையில் வைத்திருந்த 20 மற்றும் 29 வயதுடைய இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

முதற்கட்ட விசாரணைகளில் அந்தப் போதை மாத்திரைகள் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் இன்றைய அடையாள வேலைநிறுத்தம் இடைநிறுத்தம்

நாடளாவிய ரீதியில் இன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த அடையாள வேலைநிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்த சுகாதார நிபுணர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

வரவு – செலவு திட்டத்தின் மூலம் சுகாதாரத் துறையில் கொடுப்பனவுகளைக் குறைப்பது தங்களின் தொழிலையும் பாதிக்கும் என்று குற்றம் சுமத்தி, இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

எனினும், நேற்றுப் பிற்பகல் சுகாதார அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அவர்கள் வேலைநிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்த தீர்மானம் மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி, வேலைநிறுத்தம் மார்ச் 17 ஆம் திகதி காலை 8 மணி வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# வல்லையில் தங்கச் சங்கிலியை அறுத்தவர் வசமாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம் வல்லை வெளிப் பகுதியில் பெண்ணொருவரிடம் தங்கச் சங்கிலி அபகரித்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லை வெளிப்பகுதியில் சென்ற பெண்ணொருவரிடம் நேற்றுக் காலை உயர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தங்க நகையை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் நகையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டமையுடன் மற்றையவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமையவே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேக நபரை இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நெல்லியடிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கு மாற்றுத்திறனாளிகளில் இருபது பேர் செயற்கை அவயவங்கள் பொருத்த இந்தியா பயணம்



யாழ் பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமான மாற்று வலுவுடையவர்களுக்கான செயற்கை அவயவங்களைப் பொருத்தும் செயற்றிட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 20 பயனாளர்கள் நேற்றுத் தமிழ்நாட்டிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

யாழ் பலாலி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இந்தச் செயற்றிட்டத்தின் பயனாளர்கள் மற்றும் செயற்றிட்ட நிர்வாகிகள் நேற்றுப் புறப்பட்டு சென்றனர்.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த செயற்கை அவயவங்களுக்கான மையத்தின் செயற்றிட்டப் பொறியியலாளர் லவண்யா நகுலானந்தம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள – யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு – செயற்கை அவயவங்களை வழங்குவதே இச் செயற்றிட்டத்தின் நோக்கம்.

இந்தச் செயற்றிட்டமானது யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கே.செல்வகுமாரினால் ஆரம்பிக்கப்பட்டதுடன், Canada Fund for Local Initiative மற்றும், Canada Sri Lanka Business Convention ஆகிய அமைப்புகளால் நிதி வழங்கப்படுகிறது.

இச்செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக 20 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்தியாவிற்கு அழைத்து செல்லப்பட்டு சிறப்பு செயற்றிட்ட முகாம் ஒன்றில் பங்கெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு அவர்களுக்கான செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 09ம் திகதி மீண்டும் வரும் பொழுது அழைத்து செல்லப்படும் அனைவருக்குமான செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த பயனாளர்களில் ஒருவரான கந்தையா துரைராஜசிங்கம், தாம் நீண்ட நாள்களாக செயற்கை அவயவங்களுக்கான தேவைகளுடன் இருந்தார் எனவும், தாமாகவே இந்த செயற்கை அவயவங்கள் பொருத்துவதானால் அதிக பணம் தேவைப்படும் நிலையில், இந்த செயற்றிட்டம் தமக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கின்றது எனவும் கூறினார்.



# முல்லைத்தீவுப் பாடசாலையில் மாணவிகள் வாந்தி எடுத்தமையால் எழுந்த சர்ச்சையில் ஆசிரியரும், மாணவியும் வைத்தியசாலையில்!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு யானைவிழுந்தான்குளம் பாடசாலை மாணவி ஒருவரும், ஆசிரியரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு யானை விழுந்தான்குளம் பாடசாலைக்கு நேற்றைய தினம் அதே பகுதியில் வசிக்கும் மாணவி ஒருவர் வீட்டில் இருந்து தண்ணீர் கொண்டு சென்றுள்ளார். சக மூன்று மாணவிகள் அந்த நீரை அருந்தியுள்ளனர். தண்ணீரை குடித்த மாணவிகள் வாந்தி எடுத்துள்ளனர். அதனையடுத்து அந்த விடயம் ஆசிரியர் ஒருவருக்கு தெரியப்படுத்தபட்டதனையடுத்து மாணவியின் தண்ணீர் போத்தலை சோதனை செய்து பார்த்தபோது போதைப் பொருள் வாசனை அதில் வீசியுள்ளது எனக் கூறப்படுகின்றது. அதனையடுத்து அந்த மாணவியை ஆசிரியர் கண்டித்துத் தாக்கியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. இதனால் அந்த மாணவி பின்னட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்கான மாணவியின் தந்தை பாடசாலைக்கு விரைந்த தந்தை மேற்படி ஆசிரியரை சரமாரியாகத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்குள்ளான ஆசிரியரும் நேற்றையதினம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.




# யாழ். பல்கலைப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பேரவை உறுப்பினர்களாக 16 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்னவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று 05.02.2025 ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்குச் செயற்படும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஸ் (ஓய்வு பெற்ற சமூகவியல் பேராசிரியர்), இ.பத்மநாதன் (முன்னாள் பிரதம செயலாளர் - நிதி), ஏந்திரி திருமதி எஸ்.வினோதினி (பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்), ஏந்திரி.ஏ.சுபாகரன் (திட்டப்பணிப்பாளர், ஏசியா பவுண்டேசன்), வைத்திய நிபுணர் என். சரவணபவ (மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் நிபுணர்), செல்வி ஷெரீன் அபதுல் சரூர் (எழுத்தாளரும், பெண் உரிமைச் செயற்பாட்டாளரும்), கலாநிதி எம். அல்பிரட் (முன்னாள் பீடாதிபதி, பேராதனைப் பல்கலைக்கழகம்), ஏந்திரி அ. குணாளதாஸ் (பட்டயப் பொறியியலாளர்), என். செல்வகுமாரன் (முன்னாள் பீடாதிபதி, சட்டபீடம், கொழும்பு), திருமதி வனஜா செல்வரட்ணம் (பணிப்பாளர், வட மாகாண தொழிற்றுறை திணைக்களம்), டி. கே. பி.யூ. குணதிலக (முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை), எம். ஜே. ஆர்.புவிராஜ் (முன்னாள் பணிப்பாளர், திறைசேரி), பேராசிரியர் சி.சிவயோகநாதன் (வாழ்நாள் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்), பி. ஏ. சரத்சந்திர (முன்னாள் அரச அதிபர், வவுனியா), க. பிரபாகரன் (சட்டத்தரணி), ஏ.எம்.பி. என். அபேசிங்க (மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், வடமத்திய மாகாணம்.)

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக் கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஓர் உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும். பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியுடன், பால்நிலை சமத்துவம், சமய ரீதியான பிரதிநிதித்துவத்துடன், சமூக நலன் சார்ந்த உயர் சிந்தனையுடைய நபர்களையே வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்ற வரையறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சிகளின் சிபார்சின் அடிப்படையிலேயே இதுவரை காலமும் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்று வந்துள்ளமையும், யாழ்பாணத்தில் மிக நீண்டகாலமாக அமைச்சர் ஒருவரின் செல்வாக்கில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தலையில் ‘கட்’ விட்ட மாணவர்களை திருத்தி முடி வெட்டி வரச் செய்த அதிபர்

வித்தியாசமான சிகை அலங்காரங்களுடன் பாடசாலைக்கு வந்த மாணவர்களை, சிகை அலங்காரங்களைச் சீர் செய்து வருமாறு அதிபர் திருப்பி அனுப்பியுள்ளார்.

யாழ். நகருக்கு அண்மையில் உள்ள பிரபல பாடசாலையில் நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள கல்வி பொது தராதர சாதாரணப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள், இதுவரை காலமும் கல்வி விடுமுறையில் நின்று, பாடசாலைக்கு நேற்றைய தினம் பரீட்சை அனுமதி அட்டை பெற வித விதமாக முடி வெட்டி சிகை அலங்கரிப்புடன் சென்றுள்ளனர்.

அதில் சில மாணவர்கள் தமது பெற்றோருடன் அனுமதி அட்டைகளை பெறச் சென்றுள்ளனர். அவ்வாறு வித்தியசமான சிகை அலங்கரிப்புடன் பாடசாலைக்கு வந்த மாணவர்களை சிகை அகலங்கரிப்பை சீர் செய்து வருமாறு பாடசாலை அதிபர் திருப்பி அனுப்பியுள்ளார்.

உடனேயே பாடசாலைக்கு அருகில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குச் சென்ற மாணவர்கள் சிகை அலங்கரிப்பை சீர் செய்து பாடசாலை திரும்பினார்.

மாணவர்கள் தமக்குரிய ஒழுக்க விழுமியங்களுடன் நடக்க வேண்டும் எனவும், பாடசாலை காலம் முடியும் வரை பாடசாலைக்கான ஒழுக்கங்களை கடைபிடிக்க வேண்டும் எனவுன் மாணவர்களை அதிபர் எச்சரித்தமையுடன், பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுடைய நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிப்புடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் சிகை அலங்கரிப்பு தொடர்பில் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும், இது தொடர்பில் சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினரும் கடந்த காலங்களில் கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது.



# இராமேஸ்வரம் மீனவர்களின் போராட்டம் நிறைவடைந்தது

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த எட்டு நாள்களாக முன்னெடுத்த போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளனர்.

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி இழுவை படகுகளுக்கான இழப்பீட்டை 6 லட்சத்திலிருந்து 8 லட்சமாக இந்திய ரூபாவாக உயர்த்தியும், இலங்கை காவலில் உள்ள மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித்தொகையை 350 ரூபாலிருந்து 500 ரூபாவாகவும் மாநில அரசு அறிவித்த ஒரு நாள் கழித்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இந்த அறிவிப்புக்கு தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்த மீனவர் தலைவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

இருப்பினும், தங்கள் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படாவிட்டால், புதிய பாம்பன் ரயில் பாலத்தின் திறப்பு விழாவின் போது போராட்டம் நடத்துவோம் என்று மீனவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இலங்கை கடற்படை இராமேஸ்வரம் மீனவர்கள் 32 பேரையும் அவர்களது ஐந்து இழுவை படகுகளையும் கைது செய்ததை அடுத்து, பெப்ரவரி 24 ஆம் திகதி முதல் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பெப்ரவரி 28 ஆம் திகதி, அவர்கள் போராட்டத்தை தங்கச்சிமடத்திற்கு மாற்றினர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒரு நிகழ்விற்காக இராமேஸ்வரம் செல்லும் வழியில், போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களைச் சந்தித்து, மத்திய அரசிடம் அவர்களின் பிரச்சினையை எடுத்துச் செல்வதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெல்ஜியம் இளவரசியை சந்தித்தார் பிரதமர் மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் பெல்ஜியத்தின் இளவரசி ஆஸ்ட்ரிட்டை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் விவசாயம் ஆகியவற்றில் புதிய கூட்டாண்மைகள் மூலம் இரு நாடுகளும் தங்கள் மக்களுக்கு வரம்பற்ற வாய்ப்புகளை வழங்கும் என நம்பிக்கை தெரிவித்தன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல திட்டங்களுக்கு பங்களிப்பு செய்வதற்காக பெல்ஜியத்தின் இளவரசி இந்தியாவிற்கு வருகை தந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பெல்ஜியத்தின் இளவரசியை சந்தித்ததில் மகிழ்ச்சி எனவும் இந்தியாவிற்கு 300 உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதாரப் பணியை வழிநடத்தும் அவரது முயற்சியை மிகவும் பாராட்டுவதாகவும் இந்தியப் பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.




# பிலிப்பைன்ஸின் மலைப்பகுதியில் போர் விமானம் விபத்து; இருவர் பலி

பிலிப்பைன்ஸின் மலைப்பகுதியில் போர் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் புகிண்ட்னான் மாகாணத்தில் , இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட எப்,ஏ. - 50 ரக போர் விமானம் படைத்தளத்திற்கு மீளத் திரும்பவில்லை எனவும் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பையும் இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து மாயமான போர் விமானத்தைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்றதை தொடர்ந்து, போர் விமானம் புகிண்ட்னான் மாகாணத்தில் உள்ள மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது கண்டுபிடிக்கப்பட்டது.



இதன்போது விமானத்தில் பயணித்த 2 வீரர்களும் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்கா போரை விரும்பினால் தாங்களும் தயார் என்கிறது சீனா




அமெரிக்கா போரை விரும்பினால் சீனா இறுதி வரை போராடத் தயாராக இருக்கிறது என்று அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரகம் அதன் எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளது.

ஒருவேளை அமெரிக்கா போரை விரும்பினால், அது வரி விதிப்பு போர், வர்த்தகப் போர் அல்லது வேறு எந்த வகையான போராக இருந்தாலும் சரி இறுதி வரை போராட தாங்கள் தயார் என்று அந்த பதிவில் தெரிவித்துள்ளது.

தமது முயற்சிகளை அங்கீகரிப்பதற்குப் பதிலாக, அமெரிக்கா தம் மீது பழி சுமத்தியும், வரிகளை விதித்தும் அழுத்த முயற்சிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.



# ஜப்பான் காட்டுத் தீயினால் 100 வீடுகள் எரிந்து நாசம்

## 1,200 பேர் வெளியேற்றம்

ஜப்பானின் ஒபுனாடோவில் கடந்த வாரம் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது.

இந்த காட்டுத்தீ அருகில் உள்ள நகரங்களுக்கும் வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் சுமார் 100 வீடுகள் காட்டுத் தீயில் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இதில் பல லட்சம் பொருளகள் எரிந்து நாசமாகியுள்ளன என கூறப்படுகிறது.

5 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

1200 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.







# இன்றைய ராசி பலன்கள் - 06.03.2025




பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள்.கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்




இன்று லாபகரமான நாளாக இருக்கும்.அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள்.உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றி கவலைப்படத் தேவையில்லை.சிறப்பாக இருக்கும்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள்அதிகமாக இருப்பதன் காரணமாக பதற்றங்கள் காணப்படும்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள்அதிகமாக இருப்பதன் காரணமாக பதற்றங்கள் காணப்படும்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள்அதிகமாக இருப்பதன் காரணமாக பதற்றங்கள் காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.03.2025




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண் பீர்கள். உங்கள் திறமைகளை நிரூ பிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப் படும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்கு களை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செல விடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திட காத்திரம் பராமரிப்பீர்கள்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம்.இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணி யிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிபப்தை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சி கரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப் பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.

# பாலமுனை முள்ளி மலையடிப் பகுதியில் உருக்குலைந்த நிலயில் தூக்கில் சடலம்





(பாறுக் ஷிஹான்)

பாலமுனை முள்ளி மலையடி பகுதி யில் மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று காணப்படு வதாக அக்கரைப்பற்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்று மாலை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச் சேனை பிரதேச சபை எல்லைக்குட் பட்ட பாலமுனை முள்ளி மலையடி பகுதியில் இவ்வாறு உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று காணப்படு வதாக அப்பகுதியில் உள்ள பொது மக்கள் மூலம் தகவல் கிடைத்துள்ள தாக பொலிஸார் குறிப்பிட்டனர்

அப்பகுதியில. இருந்து ஒரு கிழமை யாக வீசி வரும் துர்நாற்றம் காரணமாக சந்தேகத்துடன் அப்பகுதிக்கு சென்ற சிலர் எதச் சடலத்தை கண்டு பொலி ஸாரின் கவனத்திற்கு கொண்டு வந் துள்ளனர். சுமார் 35 முதல் 38 வரை யான வயதுடையவர் என மதிக்கப்படும் ஒருவரின் இச்சடலம் கடும் நீல நிற ரீசேட் அணிந்து காணப்படுகின்றது..

மேலும் இம்மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்றுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.